**HMOP .No. 119/2020**

**Date : 29.09.2022**

***ம.சா.1 செல்வக்குமார்.***

***எ.த.குவி.***

நானும் எதிர்மனுதாரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாருக்கும் எனக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். ஆனால் எதிர்மனுதாரின் தாயார் கட்டாயத்தின் பேரில் தான் நான் திருமணம் செய்தேன். எதிர்மனுதார் திருமணத்தின்போது வேறு ஒருவருடன் உடலுறவு காரணமாக 4 மாத கர்ப்பமாக இருந்தார். எதிர்மனுதார் வேறு ஒருவருடன் ஏற்பட்ட பழக்கத்தில் 4 மாதம் கர்ப்பமாக உள்ளதை அறிந்து தான் நான் திருமணம் செய்தேன். எதிர்மனுதாரின் தாயார் கட்டாயத்தின் பேரில் திருமணம் நடைபெற்றதாக மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் யாருடன் ஏற்பட்ட பழக்கத்தில் திருமண சமயம் 4 மாத கர்ப்பமாக இருந்ததாக மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் நானும் எதிர்மனுதாரும் நான்கு மாதம் கூட்டு குடும்பமாக எனது பெற்றோர் வீட்டில ் வாழ்ந்து வந்தோம். எனக்கும் எதிர்மனுதாருக்கும் திருமண பயனாக சுருதி என்ற பெண் குழந்தை உள்ளது. சுருதி 13.04.2007ல் பிறந்தார். நான் 2007ம் ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வெளிநாட்டில் இருந்தேன். நான் வெளிநாடு சென்ற சமயம் எதிர்மனுதார் எனது பெற்றோருடன் தான் இருந்தார் என்றால் சரியல்ல. கூட்டுகுடும்பமாக நான்கு மாதம் வாழ்நத பின்னர் எதிர்மனுதார் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். நானும் எதிர்மனுதாரின் பெற்றோர் வீட்டிற்கு குடுத்தனம் செய்ய சென்றுவிட்டேன். நான் துபாய்க்கு வேலைக்கு சென்றேன். நான் 2007ம் ஆண்டு முதல் 2017ம்ஆண்டு வரை துபாயில் வேலை செய்தேன். நான் வெளிநாட்டில் பணிபுரிந்த சமயம் எதிர்மனுதாரின் குடும்ப செலவிற்கு பணம் அனுப்பினேன். நான் அவ்வாறு குடும்ப செலவிற்கு பணம் அனுப்பவில்லை என்றாலும், மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. துபாயில் இருந்து 2017ம் ஆண்டு இந்தியா திரும்பினேன். துபாயில் இருந்து வந்து எதிர்மனுதாருடன ் ஒன்றாக குடியிருந்து குடும்பம் நடத்தினேன். செப்டம்பர் 2017ல் துபாயில் இருந்து இந்தியா வந்தேன். எனது மகள் சுருதிக்கு தற்போது 17வயது ஆகிறது,. ஸ்ருதி 11ம்

வகுப்பு படித்துவருகிறார். நான் பி.எஸ்,சி கேட்டரிங் படித்துள்ளேன். இந்தியா வந்தபின்னர் ஒரு கேன்டீனில் சமையல் வேலை செய்து வருகிறேன். எதிர்மனுதார் யாருடன் இயற்கைக்கு அப்பாற்பட்ட உறவில் இருந்தார் என் மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரின் நடத்தை குறித்து அவரது தாயாரிடம் புகார் கூறினேன். எதிர்மனுதாருக்கு வேறு ஆண் நபர்களுடன் தொடர்பு இருப்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அச்சமயம் நான் வெளிநாட்டில் இருந்தேன். ஊர்மக்கள் சொல்லி விவரம் தெரிந்தது. அவ்வாறு யார் மூலம் எதிர்மனுதாரின் செய்கை குறித்து எனக்கு தெரியவ்நததாக மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரின் நடத்தை குறித்து சொக்கம்பட்டி மற்றும் தென்காசி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் எழுத்து மூல புகார் அளித்தேன். அந்த புகார் நகல் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் ரசீது நான் பெறவில்லை. என்றைய தினம் புகார் அளித்தேன் என்று மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் மீது சொக்கம்பட்டி காவல்நிலையம் மற்றும் தென்காசி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 2014, 2015 ஆண்டு வாக்கில் புகார் அளித்தேன். நான் 2007 முதல் 2017 வரை வெளிநாட்டில் வேலை செய்த நிலையில் எ்வவாறு 2014, 2015 புகார் அளித்தேன் என்றால் 2 ஆண்டிற்கு ஒரு முறை விசா முடிந்தவுடன் ஊருக்கு வந்து செல்வது வழக்கம் அந்த கால கட்டத்தில் புகார் அளித்தேன். நான் அவ்வாறு புகார் அளித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரின் எதிர்உரையை நான் படித்து பார்த்துள்ளேன். எதிர்உரையில் நான் மகேஸ்வரி என்ற பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து வருவதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு உடல் நிலை முடியாமல் உள்ளதால் மகேஸ்வரியை எனது வீட்டில் என்னுடன் வைத்திருந்தேன். ஆனால் எதிர்மனுதாரின் உறவினர்கள் வந்து மகேஸ்வரியை அடித்து துரத்திவிட்டார்கள். மகேஸ்வரி எனது மாமா மகள் ஆவார். 18.06.2019ல் எதிர்மனுதாரை வீட்டைவிட்டு காலி செய்யுமாறு நானும் எனது தாயாரும் மகேஸ்வரியும் சேர்ந்து எதிர்மனுதாரிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் தான் எங்களிடம் பிரச்சனை செய்தார். இது

சம்பந்தமாக எதிர்மனுதார் எங்கள் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. நான் தான் எதிர்மனுதார் மீது புகார் அளித்தேன். அந்த புகார் நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் மகேஸ்வரிக்கும் தாம்பத்ய பயனாக *18.05.2020*ல் கிரேனா ஸ்வீட்டி என்ற பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பிறப்பு சான்று எனக்கும் மகேஸ்வரிக்கும் இடையே ஏற்பட்ட தாம்பத்ய உறவு காரணமாக பிறந்த பெண் குழந்தையின் பிறப்பு சான்று என்றால் சரிதான். அது **எ.மா.சா.ஆ.*-1*** ஆகும். எனக்கும் எதிர்மனுதாருக்கும் திருமண பந்தம் நிலுவையில் இருக்கும்போது நான் தான் மகேஸ்வரி என்ற பெண்ணுடன் தாம்பத்ய உறவு வைத்து எதிர்மனுதாரை மனதளவில் கொடுமைப்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மகேஸ்வரியுடன் இயற்கைக்கு அப்பாற்பட்ட தொடர்பில் இருந்து குடும்பம் நடத்தி வந்த நிலையில் அதை மறைக்கும் நோக்கில் எதிர்மனுதர் வேறு ஆண்களுடன் தவறான தொடர்பில் உள்ளதாக பொய்யான காரணம் குறிப்பிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் இடம் இருந்து அதிக வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனது சம்பள கணக்கினை எதிர்மனுதார் கேட்டதற்கு நான் அப்படி தான் ஊதாரிதனமாக செலவு செய்வேன் என்று சொல்லி எதிர்மனுதாரிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் குடும்ப செலவிற்கு பணம் கேட்ட போது உனக்கு பணம் வேண்டும் என்றால் உனது பெற்றோர் வீட்டில் வாங்கி கொண்டு வா என்று சொல்லி மனதளவில் எதிர்மனுதாரை கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் அழகாக இல்லை என்றும், மகேஸ்வரிதான் அழகாக உள்ளார் என்று கூறி எதிர்மனுதாரை மனதளவில் கொடுமைப்படுத்தினேன் என்றர்ல் சரியல்ல. இது குறித்து எதிர்மனுதார் எனது பெற்றோரிடம் கூறிய போது நான் இப்படி தான் இருப்பேன் என்று கூறினார்கள் என்றால் சரியல்ல. நான் தான் வேண்டுமென்றே காரணமின்றி எதிர்மனுதார்மற்றும் அவரது குழந்தையை ஒதுக்கி வைத்து வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருந்து குழந்தை பெற்றுக்கொண்டு தற்போது பொய்யான காரணம் கூறி இம்மனுவினை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. மனுவில் கண்டவாறு யாதொரு பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதார் எந்த வகையான கொடுமை செய்தார் என்று மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நானும் எதிர்மனுதாரும் 2019 வரை ஒன்றாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. 2015 முதல் நானும் எதிர்மனுதாரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக பொய்யாக காரணம் குறிப்பிட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரின் செய்கையால் எனக்கு மன அழுத்தம் ஏற்பட்டதாக பொய்யாக காரணம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. மனுவழக்குமூலம் மற்றும் சஙகதி முற்றிலும் பொய்யானவை என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மவி இல்லை.**